சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 3 | 09-06-2011

## 02-06-2011
## தலைப்பு : உடலுழைப்பும் மூளை உழைப்பும்

**இத்தலைப்பில் சி. சிவசேகரம் அவர்களின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,**

உடலின் செயற்பாடு, குறிப்பாக உடல் உழைப்பு என்பது, மனிதன் எனும் உயிரின் இருப்பிற்கு அடிப்படையானது. மூளை உழைப்பு என்பது மனிதனின் பாதுகாப்பான இருபிற்கும் அந்த இருப்பின் தரத்தின் மேம்பாட்டிற்கும் அவசியமானது. இதில் எது உயர்வானது என்பது ஒரு பயனற்ற கேள்வி. ஏனெனில் இரண்டுமே மனிதனது தனிபட்ட இருப்பிற்கும் சமூக இருப்பிற்கும் தேவையானவை.

மனிதனுடைய உடல் உழைப்பாற்றலின் தன்மை, மனித விருத்தியுடன் சேர்ந்து மாற்றங்கட்குட்பட்டு வந்துள்ளது. அது மனிதன் எனும் விலங்கின் வெறும் உடல் உழைப்பு வலிமை என்ற எல்லையை எப்போதோ கடந்து விட்டது. கருவிகளின் உருவாக்கமும் திட்டமிட்ட பயன்பாடும் மனித உழைப்பின் விளைபயனை மிகவும் மேம்படுத்தியுள்ளன. கருவிகள் எனும் போது, பழங்காலத்தில் உருவான எளிமையான ஆயுதங்கள் தொட்டு, இன்று பாவனையில் உள்ள பலவாறான கைப் பாவனைக் கருவிகள் முதலாகக் கணனிகள், இயந்திரங்கள் என்பன வரையிலான பலவற்றையுங் கருத்திற் கொள்கிறோம்.

கருவிகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் சமுதாய விருத்தியின் போக்கில் வேகம் பெற்றுள்ளது. உண்மையிற் கருவிகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் சமுதாய உற்பத்தியிலும் உற்பத்தி உறவுகளிலும் மாற்றங்கட்குப் பங்களித்துள்ளது. தொகுத்துப் பார்த்தால், உடல் உழைப்பின் தன்மை, மூளை உழைப்பின் மூலமாகக், கருவிகளைக் கொண்டு செயற்படுகிற விதமாக மாற்றங் கண்டுள்ளது. அதே அளவிற்கு, உடல் உழைப்பின் பயனாக, நடைமுறை மூலம், அறிவு மேம்பட்டு மூளை உழைப்பும் மாற்றங் கண்டுள்ளது.

கருவிகளின் வரவும் முன்னேற்றமும் கடுமையான உடல் உழைப்பிற்கான தேவையைக் குறைத்துள்ளதுடன் மனிதரின் ஓய்வு நேரத்தை (சமுதாயத்தில் ஒரு பகுதியினருக்கேனும்) அதிகப்படுத்தியுள்ளது. இந்த ஓய்வு நேரம் மனிதரின் தேடல் முயற்சிகளுக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளது. மனிதரின் சுற்றாடல் பற்றியும் மனிதரின் இருப்புப் பற்றியுமான அறிவிற்கு ஓய்வு நேரம் பெரும் பங்களித்துள்ளது.

உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்குமிடையிலான ஏற்றத்தாழ்வான வேறுபாடு, சமூகம் ஏற்றத்தாழ்வானதாக மாறியதையொட்டியே ஏற்பட்டாலும், உடல் வலிமையை விட மூளை வலிமை முக்கியமானது என்ற எண்ணம் அடிமைச் சமுதாய அமைப்பின்போது இருந்ததை விட நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில் வலுப்பெற்றிருந்தது. பூசாரிகளும் மந்திரவாதிகளும் முன்னைய சமூகத்திற் பெற்றிருந்த மதிப்பை விட அரசர்களின் அமைச்சர்களும் அலுவலர்களும் பெற்றிருந்த மதிப்பு அதிகமாய் இருந்தது. இவ்வாறு மூளை உழைப்பு என்பது அரச அதிகாரத்துடனும் நிருவாகப் பொறுப்புக்களுடனும் தொடர்புடையதாகக் காணப்பட்டது.

நிலவுடமைச் சமூகத்தில் எவரதும் அறிவாற்றல் அவரது தொழில் சார்ந்த தேவைகட்கும் அப்பாற் போக வேண்டிய தேவை இருக்கவில்லை. பல இடங்களிலும் அவ்வாறான அறிவு வளர்ச்சி மறிக்கப்பட்டுமுள்ளது. வருமானம் போதாமை போன்ற தடைகள் இருந்து வந்தபோதும், தென்னாசியாவின் சாதியமைப்புப் போன்றவை, உடல் உழைப்பாளர்களது அறிவின் தேவையை மட்டுப்படுத்தி அவர்களது அறிவின் விருத்திக்கு தடை விதித்துள்ளன.

சமூகத்தில் உயர் நிலையில் இருப்போர் உடல் உழைப்பில் ஈடுபடாதோராகவே இருந்து வந்தனர். எனவே சமூக உயர்வு உடல் உழைப்பிலிருந்து விடுபடுவது என்றாயிற்று. உடல் உழைப்பின் இடத்தில் நிருவாகம், தரகு, வணிகம், கல்வி போன்று மூளை உழைப்புக் கூடுதலாகத் தேவைப்படும் தொழில்கள் மேலானவையாகின. எனவே எட்டுப் படிப்பு முக்கியமான ஒன்றாயிற்று.

கருவிகளின் விருத்தி மனித உற்பத்தி ஆற்றலை மேம்படுத்திய நிலையில் பெருமளவிலான உற்பத்தி இயலுமானது. அந்த உற்பத்தி ஆற்றலை நெறிப்படுத்தும் ஆற்றல் இறுக்கமான சமூக உறவுகளைக் கொண்ட நிலவுடைமைச் சமூகத்தில் இயலுமாக இருக்கவில்லை. எனவே புதிய வகையான உற்பத்தி முறைகளுடன் புதிய வகையான உற்பத்தி உறவுகளைக் கொண்ட முதலாளியச் சமூதாயம் உருவாகி ஆதிக்கத்திற்கு வந்தது. முதலாளியத்துடன் ஒட்டி ஏற்பட்ட அறிவு வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் தொழிற் புரட்சிக்கு வழிசெய்தன. இப்போது தொழிலாளி என்பவர் வெறும் உடல் உழைப்பையோ எளிமையான கருவிகளையோ மட்டுமே பயன்படுத்தும் ஆற்றலுடையவராக இருப்பது போதாததாயிற்று. முன்னேறிய தொழில்நுட்பம், முன்னேறிய அறிவுடன் சேர்ந்த உழைப்பாற்றலை வேண்டி நின்றது. எனவே கல்வியறிவு என்பது தொழிலாளர்கட்குத் தேவையான ஒன்றாக மாறியது.

(மிகுதி அடுத்த பக்கம்)

## எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

*09 - 06 - 2011*

**இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி**

*- ரஞ்சன்*

*16 - 06 -2011*

**பாலியல் தொழிற்துறையும் பெண்கள் மீதான சுரண்டலும்**

*- தேவசபா தனுஜன்*

*23 - 06 -2011*

**மதங்களின் தோற்றம்**

*- இதயராஜா*




**இஸ்ரேலின் உருவாக்கம்**

இஸ்ரேல் எப்படித் தோன்றியது? அதற்கும் யூத மதத்துக்கும் பைபிளுக்கும் உள்ள தொடர்பு என்ன? பாலஸ்தீனர்கள் எப்படி அதற்காகத் தம் சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டார்கள்? இஸ்ரேலின் இன்றைய நிலை என்ன?

நூலினைப் பெற்றுக்கொள்ள சமூக விஞ்ஞான வட்ட த்தைத் தொடர்புகொள்ளவும்.

விலை : 200 ரூபா

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாமும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்ச்சித்திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

### உடலுழைப்பும் மூளை உழைப்பும்

*முன் பக்கத் தொடர்ச்சி..*

எவ்வாறாயினும் முதலாளியம் தொழிலாளரின் உழைப்பாற்றலை மேம்படுத்தும் நோக்கிலேயே அவர்களது அறிவாற்றலை மேம்படுத்தியது. முதலாளியத்தின் சீரற்ற, சமனற்ற வளர்ச்சியின் பயனாகத் தொழிலின் தன்மைக்கேற்ப உழைப்பின் தன்மையும் அதில் மூளை உழைப்பின் பங்கும் வேறுபட்டன. அதன் அடிப்படையில் ஆற்றல் உள்ள, ஆற்றல் குறைந்த, ஆற்றல் இல்லாத தொழிலாளர் எனவும் தொழில்நுட்பஞ் சார்ந்த, சாராத தொழிலாளர் எனவும் ஏற்றத்தாழ்வுகள் உருவாகின.

முதலாளிய உற்பத்தி முறையின் வளர்ச்சியும் அதனோடு ஒட்டிய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் இன்று தொழிற் துறையின் தன்மையை மிகவும் மாற்றியுள்ளன. சேவைத் துறையின் அளவு உற்பத்தித் துறையின் அளவுடன் ஒப்பிடக் கூடியதாகவும் சில நாடுகளில் மிகப் பெரிதாகவும் வளர்ந்துள்ளது. உற்பத்தித் துறையிலும் தொழில்நுட்ப ஆற்றல்கள் முக்கியமாகியுள்ளன. எனவே சில காலம் முன்பு வரை தம்மைத் தொழிலாளர்களாகக் கருதாத மூளை உழைப்பாளர்களின் சமூக நிலை மாறியுள்ளது. அவர்களும் உடல் உழைப்பாளர்கள் போலத் தமது உழைப்பாற்றலை விற்று உயிர் வாழ்வோர் என்ற உண்மை இன்று தெளிவாகி வருகிறது. முன்னேறிய முதலாளிய நாடுகளில் உள்ள மூளை உழைப்பாளர்கள், குறிப்பாக சேவைத் துறைகளில் உள்ளோர், தம்மைத் தொழிலாளர்களாகக் கருதுகின்றனர். சில நாடுகளில் அவர்கட்கான தொழிற்சங்கங்கள் உள்ளன. தொழில் வேறுபாடுகளை கடந்து உரிமைக்காகப் போராடுகிற போக்கையும் நாம் இன்று காணலாம்.

மூன்றாமுலகச் சூழலில், குறிப்பாகத் தென்னாசியாவில், மூளை உழைப்பாளர்கள் மேலானவர்கள் என்ற சிந்தனை தொடருகிறது. மேலை நாடுகளில் உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்குமிடையிலான ஊதிய வேறுபாடு குறைந்து வந்துள்ளதால் சமூக உறவுகளில் உழைப்பின் தன்மையின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் குறைந்து வந்துள்ளன. நம்மிடையே உடல் உழைப்பை இழிவானதாகக் கருதுகிற போக்கு தொடருகிறது. அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று நமது உற்பத்தி முறைகள் இன்னமும் பின்தங்கிய நிலையில் உள்ளமை. அதினும் முக்கியமான மற்றது, நமது சிந்தனை இன்னமும் நிலவுடைமைச் சமுதாயச் சிந்தனையாகவே உள்ளமை.

தம்மை உடல் உழைப்பாளரினும் மேலானவர்களாகக் கருதும் போக்கும் சமூக உணர்வின் போதாமையும், மூளை உழைப்பாளர்கள் கடுமையாக உழைத்து உருக்குலையும் தமது நிலையை விளங்கிக் கொள்ள இயலாமல் தடுக்கிறது. தாமும் கூலி உழைப்பாளர்களே என்ற உண்மையை அவர்களாற் சீரணிக்க இயலாதுள்ளது. அதன் பயனாகத் தம்மைச் சுரண்டுகிற முதலாளிய நிறுவனங்களுக்குச் சார்பாக நிற்கிற போக்கு வலுவாக உள்ளது. தமது உரிமைகட்காகப் போராட ஒரு உழைக்கும் வர்க்கமாக ஒன்றுபட வேண்டிய தேவையையும் அவர்கள் உணர்வதில்லை.

மாறிவரும் சமூகச் சூழலும் பொருளாதார நெருக்கடிகளும் காலப்போக்கில் அவர்களுக்கு உண்மையை உணர்த்தக்கூடும்.

## வலை

**தியன் அன் மென் படுகொலை, அம்பலமாகும் பொய்கள்! (Wikileaks)**

தியன் அன் மென் சதுக்கத்தில் சீனா ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கொன்றதாகப் பரப்பப்பட்ட செய்தி மேற்கு நாடுகளின் திட்டமிட்ட சதியா? அப்படியொரு கொலையே அங்கே நடக்கவில்லை எனும் தகவல் இப்போது விக்கிலீக்ஸ் ஊடாகக் கசிந்துள்ளது.

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/13

மூலம் : *http://kalaiy.blogspot.com/2011/06/blog-post_05.html*

**பசும்பொன் தேவர் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் ?**

முற்போக்காளராகவும் சாதியொழிப்பாளராகவும் நம்பப்பட்டுவரும் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் உண்மை முகம் என்ன?

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/14

மூலம் : *http://www.vinavu.com/2011/06/04/pasumpon-muthu-ramalingam/*

**தனியாருக்கான ஓய்வூதியம் : இலங்கை அரசும் உலக வங்கியும் சேர்ந்து நடத்தும் திருட்டு**

இலங்கையில் அரசு கொண்டுவர முயலும் தனியார்த்துறையினருக்கான ஓய்வூதியத்திட்டத்தின் அரசியல் என்ன?

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/15

மூலம் : *http://kalaiy.blogspot.com/2011/05/blog-post_20.html]*

**கட்டுநாயக்க கண்ணீர் நிலமாக்கிய காவல்துறை**

அண்மையில் கட்டுநாயகாவில் போராடிய தொழிலாளர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறையின் கதை

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/16

மூலம் : *http://www.oodaru.com/?p=3575*

## இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி

09-06-2011 அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள் -ரஞ்சன்

• மனித குல இருப்பிற்கு கல்வியின் தேவை

01. உழைப்புத் திறனையும் தொழிநுட்ப அறிவினை மேம்படுத்துவதுடன் அதிகரிக்கும் சனத்தொகையின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் உற்பத்தி பெருக்கத்தினையும் புதியகண்டுபிடிப்புக்களினையும் உருவாக்களும் மேம்படுத்தலும்.

02. சமூக, பண்பாட்டு கலாச்சார விருத்தியினையும் ஆளுமை விருத்தியினையும் ஏற்படுத்தல். (கூட்டு உழைப்பும் பங்களிப்பும், கூட்டுப்பொறுப்பு மற்றும் ஜனநாயகப் பணுகளை விருத்தி செய்தல்)

03. கல்வியும் சமூக விடுதலையும்
• பண்டைய கல்வி முறைமையும் நவீன கல்வி முறைமையும்.
* சமூகத்திலிருந்து பெற்றுக்கொண்ட அறிவினை சமூகத்திற்கு வழங்கல்.
* சமூக ஏற்றத்தாழ்வும் கல்வி மறுப்பும், சகலருக்குமான கல்வி உரிமையும்.
• இலங்கையின் கல்வி முறைமை.
01. மேல்நாட்டவரின் வருகைக்கு முன்னரும் வருகைக்கு பின்னருமான கல்வி முறைமை.

02. 1948.02.04ற்கு பின்னர் இலங்கையின் கல்வி முறைமை.

02. 1948.02.04ற்கு பின்னர் இலங்கையின் கல்வி முறைமை.
• ஆரம்பப் பள்ளி முறைமை.
• ஆரம்பஇ இடைநிலை மற்றும் உயர்தர பாடசாலை முறைமை.
• உயர் கல்வி முறைமை.

(a). பல்கலைக் கழகங்கள்.
(b). தொழிநுட்பம் மற்றும் ஏனைய துறைகளுக்கான கல்லூரிகள்.
• ஒவ்வொரு காலத்திற்கும் மாறிவருகின்ற அரசின் கல்விக்கொள்கை.
• கல்விக்கான அரசின் செலவீனமும் வளப்பகிர்வும்.
• பாடசாலைகளின் தரபிரிப்பும் வளப்பகிர்வும்.

• அரசின் கல்விகொள்கை மற்றும் முறைமையின் பெறுபேறுகள் விளைவுகள்;.
• விளைவில் செல்வாக்கு செலுத்திய, செலுத்துகின்ற காரணிகள். உ.ம்: உலக மயமாக்கம், உலக வங்கியும் நிதியீட்டமும், தனியார் மயமாக்கம்,
*INGO's, NGO's, Semi Govt. Institutions. (Trust Org.) Private and Forign Universities, college and other Eduucational institutions.*

• பொருளாதார கட்டமைப்பும் அரசின் கலவிக்கொள்கைக்குமான இடைத்தொடர்பு.• அரசொன்றில் மக்களுக்கான சிறந்த கல்விக்கொள்கையொன்றினை உருவாக்கி சகலருக்குமான கல்வி என்பதனை எவ்வாறு அடைய முடியும்?